மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : மாவட்ட சேரணிப்படைத் தலைவர்களுக்கு ஜீப் கார் தனியாக ஒதுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, போர்க்காலத்தில் உதவியாக இருக்கும் வகையில், சேரணிப்படையினருக்குத் துப்பாக்கி சுடும் பயிற்சி அளிப்பதன்மூலம், தற்காப்புப் பயிற்சியும் அளிக்கப்படலாம் என்ற வகையில் அந்த போர் முறைகளைப் பயிற்சி அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அதுபற்றிப் பரிசீலிக்கப்படலாம்.

கொள்ளிடத்திற்கு உதவிப் பதிவாளர் அலுவலகம்

*261 வினா—திரு. எஸ். வடிவேல் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொள்ளிடத்தில் சப்-ரிஜிஸ்டிரார் அலுவலகம் ஒன்று ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, கொள்ளிடம் பகுதி மக்கள் சீர்காழிக்குப் போக வேண்டியதாக இருக்கிறது. 25 மைல் தூரம் இருக்கிறது. கடினமாக இருக்கிறது. ஆகவே, கொள்ளிடத்திலேயே ஒரு சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் திறக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : கொள்ளிடத்தில் துணைப் பதிவாளர் அலுவலகம் வைப்பதுகுறித்து நாகப்பட்டிணம் பதிவாளர்மூலம் பரிசீலனை மேற்கொள்ளப்பட்டது. ஆனால் கொள்ளிடத்திற்கும் சீர்காழிக்கும் அதிக தூரம் இல்லை என்பதாலும், துரித பஸ்கள் போவதாலும், அங்கே ஒரு அலுவலகம் தேவையில்லை என்று முடிவு எடுக்கப்பட்டது.

பர்கூர் மலைவாழ் மக்கள்

*262 வினா—திரு. ஈ. எம். நடராசன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், பவானி வட்டம், பர்கூர் மலைப்பகுதியில் உள்ள மலைஜாதி மக்களின் தொகை என்ன?

(இ) இவர்கள் சேலம், திருச்சி, வடார்க்காடு, தென்னார்க்காடு மாவட்டங்களில் உள்ளது போல மலைஜாதி மக்களாகக் கருதப்பட்டுச் சலுகைகள் பெறுகிறார்களா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) சுமார் 1,000.

(இ) இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS